**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 18.11.2025</u>**

**OS.12/2024**

**வா.சா.1 திருமதி.கலைவாணி**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 02.04.2014ம் தேதி அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் அந்த பத்திரம் யார் யாருக்கு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின்படி தான் எனது அப்பாவிற்கு அந்த சொத்து பாகம் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை மூலமாக எனது அப்பாவிற்கு எவ்வளவு சொத்து வந்தது என்றால் 4 ஏக்கர் 52 சென்ட். அதன்பின் எனது அப்பாவின் வாரிசுகளான எங்களுக்குள் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு ஏற்பட்டது எந்த தேதி என்று சொல்லமுடியுமா என்றால் தேதி எனக்கு தெரியவில்லை.

2. எனது அப்பாவிற்கு வாரிசுகள் எத்தனை பேர் என்றால் 3 பேர், நான் சத்யவாணி, தெய்வானை. எனது அப்பாவுடன் சேர்ந்து நான்கு நபர்கள் என்றால் சரிதான். அவர்களுடன் நான் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி எனக்கு எவ்வளவு சொத்து வந்தது என்றால் 1 ஏக்கர் 70 சென்ட். எனது சகோதரிகளுக்கு எவ்வளவு சொத்து வந்தது என்றால்

தெய்வானைக்கு 46 சென்ட். சத்யவாணிக்கு 1 ஏக்கர் 70 சென்ட் வந்தது, எனது அப்பாவிற்கு 36 சென்ட் நிலம் வந்தது. பாகப்பிரிவினையில் அனைவருக்கும் சமமாகதானே பாகம் வரவேண்டும், தெய்வானைக்கு ஏன் குறைவாக பாகம் வந்தது என்றால் எனது அக்கா தெய்வானைக்கு சீர்செய்துவிட்டார்கள், அவருக்கு பால்வாடியில் டீச்சர்வேலை வாங்கி கொடுத்துவிட்டார் அதனால் அவருக்கு குறைவான நிலம் ஒதுக்கப்பட்டது அவ்வாறு ஒதுக்கப்பட்டது எல்லாம் எங்களுடைய சம்மதத்தின்பேரில்தான் ஒதுக்கப்பட்டது.

3. 18.09.2019–ல் தான் அந்த பாகப்பிரிவினை நடந்தது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை 1ம் பிரதிவாதியான ராமலிங்கம் 2ம் பிரதிவாதியான ராணிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எங்களுக்குள் பாகம் ஏற்படுவதற்கு முன்பாகவே 1 ஏக்கர் 9 சென்ட் நிலத்தை பொறுத்து எழுதி கொடுத்துவிட்டார் அதன்பிறகுதான், அந்த சொத்தை தவிர்த்துதான் நாங்கள் 18.09.2019–ம் தேதி பாகப்பிரிவினை செய்துகொண்டோம், தெய்வாணைக்கு நாங்கள் பாகப்பிரிவினை செய்துகொண்டதில் குறைவான நிலம் வருகிறது என்பதால் அதேதேதியில் எனது தாயார் ராணி 2ம் பிரதிவாதி எனது சகோதரியான 3ம் பிரதிவாதியான தெய்வானைக்கு 1 ஏக்கர் 9 சென்ட் நிலத்தை தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. ஒரே பத்திர எழுதும் அலுவலகத்தில்தான் பத்திரங்கள் தயார் செய்யப்பட்டு எனது தாயார் தெய்வானைக்கு கொடுத்த தானசெட்டில்மெண்ட்

பத்திரத்தையும், எங்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்ட பத்திரத்தையும் தயார் செய்து கையொப்பம் செய்யப்பட்டு பத்திர பதிவு அலுவலகத்திலும் அது பதிவு செய்யப்பட்டது, அப்போதே 3ம் பிரதிவாதி தெய்வானைக்கு எனது தயார் ராணி எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் அந்த தானசெட்டில்மெண்ட் எனது சகோதரிக்கு எழுதி கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் பாகப்பிரிவினை பத்திரம் எழுதி கொண்டதற்கு பிறகு 1, 3, 4 ம் பிரதிவாதிகளான ராமலிங்கம், தெய்வானை, சத்யவாணி ஆகியோரிடம் இருந்து 5ம் பிரதிவாதி பாஸ்கர் 3 ஏக்கர், 61 சென்ட்டை விலைக்கு வாங்கினார் என்று சொன்னால் விலைக்கு வாங்கியது பற்றி எனக்கு தெரியாது.

5. தாவாசொத்தான 5ம் பிரதிவாதி வாங்கிய சொத்துக்கும் எனக்கு பாகம் கிடைத்து சொத்துக்கும் இடையே ஒரு ரோடு மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியான பாஸ்கர் நிலத்தை கிரையம் வாங்கி 2 மாதம் கழித்து அந்த சொத்தை எல்லாம் ஒருமாதமாமக சமன்படுத்தும் வேலைசெய்து விவசாய நிலமாக மாற்றினார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பின் அந்த நிலத்திற்கு 5ம் பிரதிவாதி பாஸ்கர் நிலத்தை சுற்றியும் கம்பிவேலி அமைத்தார் அவ்வாறு அமைப்பதற்கு நான், எனது அக்கா தேன்மொழி, எனது கணவர் ஜனார்த்தனன் ஆகியோர்தான் உதவி புரிந்து கம்பிவேலி அமைத்தோம் என்றால் இல்லை. பின்னர் 5ம் பிரதிவாதி கிரையம் பெற்ற நிலத்திற்கு வருவாய் ஆவணங்களான பட்டா,

சிட்டா ஆகியவற்றை தன் பெயருக்கு மாற்றிக்கொண்டு அதில் போர்வெல் அமைத்து, தென்னங்கன்றுகள் நட்டு விவசாயம் செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த நிலத்தில் எங்கள் வீட்டுக்கு பின்பக்கம் ஒரு கேட் வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான், தெரியும்.

6. ராமலிங்கம் அவரது சகோதரர்களுடன் பாகப்பிரிவினை செய்து கொண்டது தொடர்பாக தனலட்சுமி ஒரு வழக்கு இந்நீதிமன்றத்தில் OS.02/2020 என்ற வழக்கு தாக்கல் செய்து அது மக்கள் நீதிமன்றத்தில் முடிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த விவரங்கள் எல்லாம் எனக்கு தெரியும், இந்நீதிமன்றத்தை ஏமாற்றும் எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரம் நானும், எனது அப்பாவும், சகோதரிகளும் செய்து கொண்ட பிறகு சொத்துக்களை ராமலிங்கம், தெய்வானை, சத்யவாணி 5ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை விற்பனை செய்த பிறகு எனது அப்பா, அம்மா எங்கு வசிக்கிறார்கள் என்றால் முத்தானூரில் எனது அக்கா தெய்வானையுடன் வசித்து வருகிறார்கள். நானும் எனது கணவரும் ஒன்றாகதான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

7. 5ம் பிரதிவாதி விலைக்கு வாங்கிய சொத்தின்மீது ரோடுபாத்தியம் வேண்டும் என்று எனது கணவர் ஜனார்த்தனன் 2023 ல் 5ம் பிரதிவாதி மீது அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.94/2023 என்ற வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி

வழக்கில் 5ம் பிரதிவாதி சார்பாக நீதிமன்ற ஆணையர் நியமிக்கவேண்டும் சொத்தை பார்வையிடவேண்டும் என்று மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் அந்த சொத்தை பார்வையிட வந்தபோது நாங்கள் அதனை தடுத்தோம், பின்னிட்டு ரோட்டை சேதப்படுத்தி நிலத்துடன் சேர்த்துவிட்டோம் அது தொடர்பாக 5ம் பிரதிவாதி கோட்டப்பட்டி காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எங்கள் நிலம்உள்ளது என்பதை சர்வே செய்தவர்கள் சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள், அப்போது ஊர்பொதுவர்களும் இருந்தார்கள். சர்வேயருக்கு பணம்கட்டி நிலம் அளக்கப்பட்டதா என்றால் ஆமாம். அவ்வாறு பணம் கட்டி அளந்தற்கான ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்களுடைய நிலம் நான் சொல்வதுபோல இருந்திருந்தால் நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வந்திருக்கும்போதே அளவீடு செய்திருப்போம், ஆனால் அதனை தடுத்துவிட்டு ரோட்டை வெட்டி எங்கள் நிலத்துடன் சேர்த்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

8. எனக்கு பாகப்பிரிவினை மூலம் 1 ஏக்கர் 70 சென்ட் வந்தது என்றால் சரிதான். தெய்வானைக்கு பாகப்பிரிவினை மூலமும், அவருக்கு தானசெட்டில்மெண்ட் மூலமாகவும் வந்த சொத்துக்கள் சேர்த்து 1 ஏக்கர் 55 சென்ட் என்று சொன்னால் எனது அப்பா எனது சகோதரிக்கு தானசெட்டில் மெண்ட் எழுதி கொடுத்தது பற்றி தெரியாது, எனது சகோதரிக்கு பாகம் கிடைத்த சொத்து மட்டுமே எனக்கு தெரியும். எனது அப்பா, அம்மாவிற்கு

சொத்துஇருந்திருந்தால் அவர்கள் சொந்த நிலத்திலேயே குடியிருந்திருப்பார்கள் அவர்கள் சொத்தை எல்லாம் எழுதி கொடுத்த பிறகு அவர்களை ஊரைவிட்டு நான் துரத்திவிட்டு விட்டேன் என்றால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். 2014ம் ஆண்டு எனது அப்பா அவரது சகோதரர்களுடன் பாகப்பிரிவினை பத்திரம் செய்துகொண்ட பிறகு 2 ஆண்டுகள் கழித்து நானும் எனது கணவரும் மாமியாரை வைத்து பாகம் பிரியவில்லை என்று ஏற்கனவே செய்த பாகப்பிரிவினையை மறைத்தும், அதில் உள்ள வண்டிபாதை அளவான 10 அடி அகலம் என்பதை மறைத்தும் ஒரு பாகப்பிரிவினை வழக்கை இந்நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண் OS.82/2014 வழக்கில் முன்னர் செய்த பாகப்பிரிவினையை மறைத்தும், 10 அடிஅகலம் உள்ள பாதை என்பதை மறைத்து 15 அடி அகல பாதை என சேர்த்தும் மோசடியான ஒரு பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. 5ம் பிரதிவாதி நிலத்தில் உள்ள பொதுபாதையையும் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அதை எங்கள் நிலத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து ஒரு பொய்யான வழக்கை 5ம் பிரதிவாதியான பாஸ்கரை நான் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு பாகப்பிரிவினை செய்த நாளிலேயே எனது அப்பா ராமலிங்கம் எனது அம்மாவிற்கு தானசெட்டில்மெண்ட் செய்த நிலத்தை எனது அம்மா 3ம் பிரதிவாதியான தெய்வானைக்கு தானசெட்டில்மெண்ட் செய்து வைத்தார் என்ற சங்கதி

எனக்கு நன்கு தெரியும் அதை எல்லாம் தெரியாது என்று தற்போது சொல்லி பொய்யாக இநத் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2020 ல் 5ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு 5ம் பிரதிவாதி பெகயரில் வருவாய் ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்ட விவரமும், எனக்கு நன்கு தெரியும் மேலும், அதில் உள்ள பொதுப்பாதைக்கு 5ம் பிரதிவாதி பெயரிலும், எங்கள் பெயரிலும் கூட்டுபட்டாவாக உள்ள விவரமும் நன்கு தெரியும் ஆனால் இந்த வழக்கிற்காக 5ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்தது பற்றியும் அதற்கு முன் எனது தாயார் எனது சகோதரிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தது தெரியாது என்ற பொய்யான சங்கதிகளை சொல்லி நான்இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுடைய நிலத்திற்கும், 10 அடி தொலைவில் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்கள் இருக்கும்போது அவர் கிரையம் பெற்ற விவரங்கள் எல்லாம் எனக்கு தெரியாது என்று இந்த வழக்கில் நான் பொய்யான சங்கதிகளை சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொய்யான காரணங்களை கூறி நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.18 16:47:55 +0530